முரசொலி பாசறை
மதுரை 18.05.2023



# 18 இடம் பொருள் கலைஞர்

**‘செயல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். ஆழமான சிந்தனைக்குப் பின் வருவதே ஆற்றல்மிகு செயல். பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் சிந்தித்துச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்புகள் குறித்து வாரந்தோறும் இங்கு...**








## கார் தொழிற்சாலைகள்

### தமிழ்நாட்டில் பிறந்து தரணியை ஆளும் கார்கள்!

ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டுச் சாலைகளில் புதுப்புது கார்கள் பதிவு செய்யப்பட்டு இறங்குகின்றன. ஒவ்வோர் ஆண்டும் கார் விற்பனை எண்ணிக்கை, தமிழ்நாடு போன்ற தொழில்மயமான நகரங்களில் அதிகரித்துக்கொண்டே இருப்பதாக வர்த்தகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. மக்களிடம் வாங்கும் சக்தி அதிகரிப்பதன் ஒரு குறியீடே இது.

முன்பெல்லாம் வசதி படைத்தோர் வீடுகளில் மட்டுமே கார்களைக் காண முடியும். அதேபோல கார்கள் வாங்குவது அவ்வளவு லேசுப்பட்ட காரியமாகவும் இருக்கவில்லை. இன்று அப்படியல்ல. கார் என்பது ஆடம்பரம் என்ற மனநிலை மாறி, அது ஓர் அத்தியாவசியமான உடைமை என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். அதுவும் பல வீடுகளில் இரண்டு மூன்று கார்கள் கூட அணிவகுத்து நிற்கின்றன.

கார்கள் வாங்குவதும் சுலபமாகி உள்ளது. ஒரு தொலைபேசி அழைப்பில், வங்கிகளே வீடு தேடி வந்து கார் வாங்கக் கடன் கொடுக்கின்றன. இதெல்லாம் எப்படிச் சாத்தியமாகி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

கார்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, கார் தயாரிக்கும் நிறுவனங்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, அப்படித் தொடங்கிய கார் தயாரிப்பு நிறுவனங்களில் நம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, நிர்வாகம் மற்றும் ஊழியர்களுக்கு இடையே ஏற்படும் எந்த சலசலப்பையும் சுமூகமாகத் தீர்த்து வைத்து, இந்த நிறுவனங்களை மாநிலத்தின் ஓர் இடத்தில் மட்டும் தேக்கிவைக்காமல், மாநிலத்தின் இதர பகுதிகளிலும் தொழிற்சாலைகளையும் தொழிற்பேட்டைகளையும் தொடங்கி நடத்தியதால்தான், இன்று நாம் நினைத்த நொடியில், விரும்பிய காரை வாங்க முடிகிறது.

**இதற்கெல்லாம் வித்தாக அமைந்தது, முத்தமிழறிஞர் கலைஞரின் லட்சியம்தான். ஆம்... ‘சென்னையிலிருந்து பெங்களூர் வரை நீண்ட தொழில் நகரம் உருவாக்குதல்’ என்பதுதான் அவரது லட்சியம்.**

அந்த லட்சியத்தின் ஒரு முகம்தான் 1998-ஆம் ஆண்டு கலைஞரால் தொடங்கி வைக்கப்பட்ட **ஹுண்டாய் கார் உற்பத்தி**.

### முதலீடும் வேலைவாய்ப்பும்

அந்தத் தொழிற்சாலை அமைக்கும் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி கலைஞரால் அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் 1998-ஆம் ஆண்டு மே 27-ஆம் தேதி சோதனை உற்பத்தி தொடங்கியது. அதே ஆண்டு அக்டோபர் 9-ஆம் தேதி அதன் வணிக உற்பத்தி கலைஞராலேயே தொடங்கி வைக்கப்பட்டது.

அன்றைய நிலவரப்படி, அந்தத் தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் கார்களையும், ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் என்ஜின்களையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றதாக இருந்தது. மேலும் 1999-ஆம் ஆண்டு அக்டோபர் வரையில் 2,192 பேருக்கு வேலைவாய்ப்பினை அந்த நிறுவனம் வழங்கியிருந்தது. அதில் 90 சதவிகிதத்துக்கும் மேல் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இருங்காட்டுக்கோட்டை என்றாலே இருள், காடு, கோட்டை என்ற மூன்று சொற்களைக் கொண்டது. இன்றைக்கு அந்த ஊரைப் பார்த்தால், ஒளிமயமான ஒரு புதிய நகரமாக அது உருவாகி இருக்கின்றது.**

### இந்தியாவின் டெட்ராய்ட்

1999 -ஆம் ஆண்டு அக்டோபர் 15- ஆம் தேதி, ஹுண்டாய் மோட்டார் கம்பெனியின் புதிய தயாரிப்பான **‘அக்சென்ட்’** காரின் விற்பனையை கலைஞர் தொடங்கி வைத்துப் பேசும்போது, “1996 -ஆம் ஆண்டுக்குப் பின் இந்த அரசு 3 பெரிய கார் தொழிற்சாலைகளை சென்னைக்கு அருகே நிறுவிட உதவியிருக்கிறது. அவற்றுள் ஒன்றுதான் இந்த மாபெரும் சாதனை படைத்துள்ள ஹுண்டாய் கார் நிறுவனமாகும்'' என்றார்.

மேலும் அவர், “இரண்டாவதாக, **மிட்சுபிஷி லான்சர்** கார் தொழிற்சாலை 320 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூரில் கடந்த ஆண்டு (1998) தொடங்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக, மறைமலை நகரில் 1,700 கோடி ரூபாய் முதலீட்டில் ஃபோர்டு மோட்டார்ஸ் கார் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் பல தொழிற் சாலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக தமிழகம் **‘இந்தியாவின் டெட்ராய்ட்’** என்கின்ற பெரும் புகழைப் பெற்றிருக்கிறது என்பதையும் மிகுந்த பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்'' என்றார்.

இதன் காரணமாகவே, 1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ஆம் தேதியிட்ட ‘ஃபினான்சியல் டைம்ஸ்’ என்ற வணிகப் பத்திரிகையில், மார்க் நிக்கல்சன் என்ற பிரபல நிருபர், ‘வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில், மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது’ என்று பாராட்டினார்.

### ஒளிமயமான நகரம்... ஒளிமயமான மாநிலம்...

பத்திரிகைகள் மட்டுமல்ல, கார் தயாரிப்பு நிறுவன சங்கங்கள் கூட தமிழ்நாட்டை அந்தச் சமயத்தில் போற்றிப் புகழ்ந்தன. உதாரணத்துக்கு, பிரிட்டிஷ் மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் பன்னாட்டு விற்பனை மேலாளர் . பெர்னார்டு ஃபின்ட்லே என்பவர், சென்னையில் வாகன உற்பத்தித் தொழில்களுக்குரிய வாய்ப்புகள் குறித்து இங்கு நேரில் வந்து ஆய்வு செய்தபின், **“பிரிட்டிஷ் வாகன உதிரி பாகத் தொழில்களுக்கு இங்கு கிடைக்கும் அளவுக்கு உதவிகளும் வாய்ப்புகளும் உலகில் எந்த ஒரு பகுதியிலும் கிடைக்கும் என்று நான் கருதவில்லை”** என்றார்.

> 1996- ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அமர்ந்தது. அந்த ஆண்டு ஜூலை 6 -ஆம் தேதி, ஹுண்டாய் கார் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இத்தொழிற்சாலைக்காக ஏறத்தாழ 530 ஏக்கர் நிலத்தை அவர்கள் விரும்பிய காலக்கெடுவுக்குள் கலைஞர் தலைமையிலான அரசு மிக விரைவாக வழங்கியது.

1989-1990-ஆம் ஆண்டில் மூன்றாவது இடத்திலிருந்த தமிழ்நாட்டின் தொழில் முதலீடுகள், பின்னர் ஐந்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு, 1998 - 1999 - ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் மகாராஷ்டிர மாநிலத்தையும் வென்று தமிழ்நாடு முதல் இடத்தில் இருந்தது. அதற்குக் காரணம், ஹுண்டாய் உள்ளிட்ட கார் நிறுவனங்களின் சிறப்பான பங்களிப்புதான்.

ஹுண்டாய் கார் விற்பனை நிகழ்ச்சியில் கலைஞர் சொன்ன இன்னொரு முக்கியமான விஷயம் இது: “சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் வழியில் இருங்காட்டுக்கோட்டை இருக்கிறது. இருங்காட்டுக்கோட்டை என்றாலே இருள், காடு, கோட்டை என்ற மூன்று சொற்களைக் கொண்டது. இன்றைக்கு அந்த ஊரைப் பார்த்தால், ஒளிமயமான ஒரு புதிய நகரமாக அது உருவாகியிருக்கின்றது. அதற்கு வழி வகுத்துக் கொடுத்தது இந்த ஹுண்டாய் தொழிற்சாலை. என்னுடைய ஆசை இருங்காட்டுக்கோட்டை மாத்திரமல்ல. பக்கத்திலே உள்ள பகுதிகள் மாத்திரமல்ல. சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் வரையில் ஒரு புதிய நீண்ட நகரத்தை, தொழில் நகரத்தை உருவாக்குவதற்கு நாம் தயாராக இருப்போம். அதற்கான ஊக்கத்தை வழங்குவோம்'' என்றார்.

**அன்று கலைஞர் சொன்ன வழியில் இன்று நம் கழகத் தலைவர் முதல்வர் வெற்றி நடைபோடுகிறார். இனி மாநிலம் முழுக்கவே ஒளிமயம்தான்..!**

**...வலம் வருவோம்**

## :ப்ளாஷ்பேக்



### தலைவர்கள் பெயர்கள்!


அன்பழகன்


1989-ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம், திருநெல்வேலி டவுன் வாகடி முனையில் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞருடன் வைகோவும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். என் தந்தை கே.கே.பரமசிவம் சிறப்புற பணியாற்றியமைக்காக, பொதுக் கூட்டத்தின் முடிவில், தலைவர் கலைஞர் சால்வை அணிவித்துச் சிறப்புச் செய்தார். கருணாநிதி, அன்பழகன், அண்ணாதுரை, தமிழ்ச்செல்வி போன்ற கழகத் தலைவர்களின் பெயர்களைத் தன் குழந்தைகளுக்கு வைத்து அழகு பார்த்தார் என் தந்தை. அந்த உணர்வுகளை எங்களுக்குள்ளும் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார்.

**-ப.அன்பழகன், மாவட்டத் துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி, திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## உயர்கல்வியில் தமிழகமே முதலிடம்!

### கல்விக்கு அடித்தளமிட்ட கலைஞர்!





இந்திய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு, மாணவர்கள் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கி இருக்கும் நேரம் இது. அப்படியான தேடுதலில் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களே முதன்மையான இடத்தில் இருக்கின்றன. ஒன்றிய அமைச்சகத்தின் கல்வித்துறை வெளியிடும் தகுதியான நிறுவனங்கள் பட்டியலில் தமிழ்நாட்டில்தான் அதிக கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக உயர்கல்வியில், மிகச் சிறந்த 100 நிறுவனங்களில் 20 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. ‘பொறியியல் படிப்புக்கு மிகச்சிறந்த கல்வி நிலையங்கள் உள்ளன’ என ஒன்றிய அமைச்சகத்தின் பட்டியல் மூலம் தெரிய வருகிறது. குறிப்பாக, சென்னையின் ஐ.ஐ.டி. தான் முதலிடத்தில் உள்ளது. இதனால், ஒன்றிய அளவில் மாணவர்களின் தேர்வு, தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களாகவே உள்ளன. வேலை வாய்ப்புகளிலும், கல்வியிலும் தமிழ்நாடு காட்டும் வழிகாட்டுதல், அரசியல் வழிகாட்டுதலின் அடிப்படையில் உருவானவை. அந்த அரசியல்தான் ‘திராவிட மாடல்’. கலைஞர் அடித்தளமிட்டு நமது முதலமைச்சர் வழி நடத்தி வருவது.

### கருவூலம் ‘ஆரிய மாயை’ வழக்கு!

**1949 -ஆம் ஆண்டு செப்டம்பர் -18 ஆம் தேதி, பேரறிஞர் அண்ணா எழுதிய ‘ஆரிய மாயை’ நூலுக்காக ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், தந்தை பெரியாரும் அவரது நூலுக்காகச் சிறைத் தண்டனை பெற்று அதே சிறையில் அடைக்கப்பட்டார். இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும், கழகத் தொண்டர்கள் கண்டனப் பொதுக்கூட்டம், கடையடைப்பு மற்றும் அண்ணாவை விடுவிக்க வேண்டும் என உரக்கக் குரல் எழுப்பினர். இது சென்னை மாகாண அரசுக்குக் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இதையடுத்து பெரியார், அண்ணா இருவரும் பத்து நாட்களில் விடுதலை செய்யப்பட்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 121




**எழுத்து : கோவி.லெனின்**
**ஓவியம் : கி.சொக்கலிங்கம்**

**-வாழ்வோம்**

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.